பிரசார் பாரதி

அகில இந்தய வானொலி, சென்னை-4

04 09 2026 FRIDAY 12 40 PM ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அதிநவீன புவி கண்காணிப்பு செயற்கை கோள் EOS-05 வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

2. பிரிக்ஸ் நாடுகளின் தலைமை நீதிபதிகள் நிலையிலான மூன்று நாள் கூட்டம் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

3. பகவான் கிருஷ்ணர் அவதரித்த, உத்தரபிரதேச மாநிலம், மதுரா-வில் கோகுலாஷ்டமி கொண்டாட்டங்கள் களைகட்டியுள்ளன.

4. நேபாளத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக, நீர்மின் திட்ட சுரங்கத்தில் சிக்கியிருந்த இரண்டு தொழிலாளர்கள், பத்து நாட்களுக்குப் பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

5. Bali சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

அதிநவீன புவி கண்காணிப்பு செயற்கை கோள் EOS-05 ஜிஎஸ்எல்வி-எஃப்-17 ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இஸ்ரோவின் இந்த வெற்றி, விண்வெளித்துறையில் மற்றொரு மகத்தான சாதனையாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இது, இந்திய விண்வெளி விஞ்ஞானிகளின் ஆற்றல் மற்றும் புதிய கண்டுபிடிப்பு திறமைகளை இது வெளிப்படுத்துவதாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரோவுக்கும் இந்திய தொழில்துறையினருக்கும் இடையேயான ஒத்துழைப்பு அதிகரித்து வருவது, நமது விண்வெளித் திட்டங்களுக்கு புதிய வலிமையை சேர்ப்பதோடு, ஒட்டுமொத்த உலகிற்கும் பயனளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வெளியிட்டுள்ள செய்தியில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை காரணமாக, இந்திய விண்வெளித்துறை புதிய உச்சங்களை எட்டி வருவதாக கூறியுள்ளார்.

இதுபோன்ற சாதனைகள், விண்வெளித் துறையில் இந்தியாவை உலகளாவிய சக்தியாக மாற்றும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், செயற்கைக்கோளை வெற்றிகரமாக செலுத்தியதன் மூலம் இஸ்ரோ விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளதாக கூறியுள்ளார்.

இந்த சாதனை இந்திய விண்வெளி ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதில் இந்தியாவை முன்னணி நாடாக நிலைநிறுத்தும் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்ட பிறகு, செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன், நாட்டின் விண்வெளித் தேவைகளை நிறைவேற்ற, தனியார் பங்களிப்பும் அவசியம் என்று கூறினார்.

தேவைகள் அதிகரித்து வரும் நிலையில், இஸ்ரோவால் மட்டுமே அவற்றை பூர்த்தி செய்ய இயலாது என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய சூழலில், இந்தியாவிற்கு நூற்றுக்கு அதிகமான செயற்கைக்கோள்கள் தேவைப்படும் நிலையில் 56 செயற்கைக்கோள்கள் மட்டுமே உள்ளதாகவும் திரு. நாராயணன் குறிப்பிட்டார்.

தமிழகத்தின் குலசேகரபட்டிணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஏவுதளத்திற்கான கட்டுமானப் பணிகள் திட்டமிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

ககன்யான் விண்கலத்தின் முதற்கட்டமாக இந்த ஆண்டே ஆள்இல்லா விண்கலத்தை அனுப்ப திட்டமிட்டுள்ளதாகவும் திரு. நாராயணன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பிரிக்ஸ் நாடுகளின் தலைமை நீதிபதிகள் நிலையிலான மூன்று நாள் கூட்டம் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

இதில் பிரிக்ஸ் மற்றும் நட்பு நாடுகளைச் சேர்ந்த மூத்த நீதிபதிகள் பங்கேற்றுள்ளனர்.

கூட்டத்தில் பங்கேற்றுள்ள நீதித்துறை பிரதிநிதிகளுடன் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் ஆலோசனை நடத்தவுள்ளார்.

நீதித்துறையில் பரஸ்பரம் நலன் சார்ந்த அம்சங்கள் குறித்த நேரடி கலந்துரையாடலாக இது அமையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

பகவான் கிருஷ்ணர் அவதரித்த, உத்தரபிரதேச மாநிலம், மதுரா-வில் கோகுலாஷ்டமி கொண்டாட்டங்கள் களைகட்டியுள்ளன.

மதுரா மற்றும் பிருந்தாவன் முழுவதும் வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளன.

நாடுமுழுவதிலுமிருந்து வந்துள்ள லட்சக்கணக்கான பக்தர்கள் அங்கு குவிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பக்தர்களின் தேவைகளுக்கேற்ப போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதுடன், பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கிருஷ்ண பகவானின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் வகையில், ட்ரோன் காட்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள பதிவில், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் போதனைகள், இந்திய கலாச்சாரம் மற்றும் தத்துவப் பாரம்பரியத்திற்கு புத்துயிரூட்டும் வகையில் அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

குடியரசுத் துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், கிருஷ்ண பகவானின் வாழ்க்கை உண்மையையும், கடமை உணர்வையும் மக்களுக்கு போதிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், கிருஷ்ண பகவானின் போதனைகள், தன்னலமற்ற சேவைகளுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டு மக்கள் அனைவரது வாழ்விலும் ஒற்றுமை, அமைதி, மகிழ்ச்சி மற்றும் வளம் பெருகிட கிருஷ்ணரை பிரார்த்திப்பதாக கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. விஜய் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், எத்தகைய சூழலிலும் கடமை தவறாது செயல்படுவதுடன், தர்மத்தின் வழியில் மனஉறுதியுடனும் நம்பிக்கையுடனும் வாழ்க்கைப் பயணத்தை முன்னெடுக்க கிருஷ்ணரின் உபதேசங்களை பின்பற்றுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தின் சென்னையில் உள்ள ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில், பயிற்சியை நிறைவு செய்த அதிகாரிகளின் தீரச் செயல் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

அந்த பயிற்சி மையத்தின் தலைவர் லெப்டினென்ட் ஜென்ரல் மைக்கேல் ஃபெர்னான்டஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இதில் பங்கேற்ற இளம் ராணுவ அதிகாரிகள், தற்காப்புக்கலை, குதிரையேற்றம், களரிபயிற்று, பதுங்கு குழி தகர்ப்பு போன்ற சாகச நிகழ்ச்சிகளை செய்து காட்டினர்.

>>>>>><<<<<<

நேபாளத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக, அங்குள்ள Trishuli நீர்மின் திட்ட சுரங்கத்தில் சிக்கியிருந்த இரண்டு தொழிலாளர்கள் 10 நாட்களுக்குப் பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

அந்த சுரங்கத்தில் சிக்கியுள்ள எஞ்சிய தொழிலாளர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக நேபாள ராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த 26ஆம் தேதி நேரிட்ட இந்த பெருவெள்ளத்தில் சிக்கிய ஐயாயிரத்து 53 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்தியாவிலிருந்து சென்றுள்ள மீட்பு குழுவினர் Chilime மின்திட்டப் பகுதியில் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

மேற்குவங்கத்தில் உணவு பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், அதிகாரிகள் மாநிலம் முழுவதும் தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

உணவகங்கள், இனிப்பகங்கள் மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உட்பட ஆயிரத்து 730 இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு. Saradwat Mukhopadhyay தெரிவித்துள்ளார்.

தரமற்ற உணவு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக வந்த புகாரின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

வணிக கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதை ஈரான் நிறுத்தும்-வரை, அந்நாட்டுடன் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தப்படமாட்டாது என்று அமெரிக்க துணை அதிபர் திரு. J.D. Vance தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அணுசக்தி திட்டங்களை ஈரான் கைவிடாவிட்டால், அந்நாட்டிற்கு எதிராக பொருளாதார மற்றும் ராணுவ ரீதியிலான தடைகள் விதிக்கப்படும் என்று கூறினார்.

எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்ய சர்வதேச அளவிலான அழுத்தம் கொடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈரானுடன் பேச்சுகள் நடத்த காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் திரு. J.D. Vance தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ரா மற்றும் அருணாச்சலப்பிரதேசத்தில் நேரிட்ட நிலச்சரிவு காரணமாக அங்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளன.

மஹாராஷ்ட்ரா மாநிலம் Raghuveer மலைப்பகுதியில் நேற்றிரவு நேரிட்ட இந்த நிலச்சரிவால், சதாரா மற்றும் ரத்னகிரி மாவட்டங்களுக்கு உட்பட்ட சுமார் 20 கிராமங்களுக்கான போக்குவரத்து தடைபட்டுள்ளன.

இதன் காரணமாக, பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்களும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தொலைத் தொடர்பு சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, அருணாச்சலப்பிரதேசத்தின் Tawang பகுதியில் நேரிட்ட நிலச்சரிவால், அஸ்ஸாம் - அருணாச்சலப்பிரதேசம் இடையேயான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலையில் சரக்கு வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதிப்புகளை சீரமைக்கும் பணியில் ஊழியர்கள் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர்.

மழைக்காலங்களில் இதுபோன்று அடிக்கடி நிகழும் பாதிப்புகளை சரிசெய்ய இப்பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

>>>>>><<<<<<

மத்தியப்பிரதேசத்தில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

பீகார், ராஜஸ்தான், உத்ராகண்ட் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு கஷ்மீர் மற்றும் லடாக் பகுதிகளிலும் இதேநிலை காணப்படும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தெற்கு உட்புற கர்நாடகா, தெலங்கானா மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகளில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

Bali நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-1, 6-4 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Nathan Barki-யை வென்றார்.

>>>>>><<<<<<

Almaty டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Swastika Ghosh காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர் 13-11, 11-7, 5-11, 11-7 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Miyuu Kihara-வை வென்றார்.

>>>>>> <<<<<<